உதவி அமர்வு நீதிமன்றம், வள்ளியூர்.

முன்னிலை:- **திருமதி. அ. பர்ஷாத் பேகம், பி.ஏ., எம்.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி, வள்ளியூர்.**

**(2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாள், வியாழக்கிழமை)**

**CRMP No.661/2022**

**,in**

**Sessions Case No.203/2022**

எஸ்.கிரினிவாசபிரசாத் (வயது 47)

த/பெ.பி.சிவசுப்பிரமணிய பிரசாத்

பாலம் சமீபம்

வில்லுக்குறிச்சி - அஞ்சல்

கன்னியாகுமரி மாவட்டம். ...**மனுதாரர்/ எதிரி**

//எதிர்//

மாநில அரசின் சார்பில்

காவல் ஆய்வாளர்,

கோட்டார் காவல் நிலையம், கோட்டார்

நாகர்கோவில் அஞ்சல்

கன்னியாகுமரி மாவட்டம். ...**எதிர்மனுதாரர்/முறையீட்டாளர்.**

இந்த மனுவானது என் முன்பு இறுதியாக 08.02.2024 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.ஆனந்தராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.ராமநாராயணபெருமாள் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலித்து இதுநாள் வரை ஆய்வில் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் . . .

**உத்தரவு**

1. மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்களுக்காக மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நீதிமன்றம் குற்றசாட்டு வனைவதற்கு முன்பாக வரவழைத்து பரிசீலிக்கப்பட வேண்டி கேட்டு குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 91-ன் கீழ் இந்த மனு,

2. **மனுச்சுருக்கம் -**

இந்த மனுதாரர் நிரபராதி, அவர் ஒரு வழக்கறிஞர். அவர் மீது இந்த வழக்கு காவல்துறையினரால் பழிவாங்கும் நோக்கத்தில் பொய்யாக வனையப்பட்டுள்ளது. குற்ற வழக்கு குற்றசாட்டு வனைவதற்காக நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் உண்மையான குற்ற

நிகழ்வு மறைக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/எதிரி மனித உரிமைகள் பாதுகாப்பு இலவச சட்ட உதவி மையம் என்ற பெயரில் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கி வருகிறார். மனுதாரர்/எதிரி 19.08.2011ம் தேதி தமிழக காவல்துறை உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட காவல்கண்காணிப்பாளர், கன்னியாகுமரி அவர்களுக்கும், சுசீந்தரம் காவல் ஆய்வாளர் பீட்டர் பால்துரைன் சட்ட விரோத செயல்பாடு குறித்து ஒரு பொது நல புகார் மனு அளித்தார். அந்த பொது நல புகார் மனு கன்னியாகுமரி மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலக எண். N.Ref/B2/SP/3688/2011 ஆகும் அந்த புகார் மனுவினை விசாரணை செய்திட காவல் சப்டிவிஷன் காவல்துணை கண்காணிப்பாளர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் முன்பு 23.08.2011ம் தேதி இந்த மனுதாரர் ஆஜர் ஆகி வாக்குமூலம் கொடுத்தார். அவரது புகார் மனுவின் எதிர்மனுதாரராக சுசீந்திரம் காவல் ஆய்வாளர் பீட்டர் பால்துரை 05.09.2011 அன்று விசாரணை அதிகாரி முன்பு ஆஜர் ஆகி வாக்குமூலம் அளித்தார். இந்நிலையில் 06.09.2011 அன்று மனுதாரர்/எதிரி மீது வை.செல்வக்குமார் என்பவரிடமிருந்து பொய் புகார் பெற்று பொய் வழக்கு பதிவு செய்தார். 05.09.2011ம் தேதியில் பீட்டர் பால்துரை விசாரணை அதிகாரியிடம் அளித்த வாக்குமூலத்தின் மூலம் மனுதாரர்/எதிரி மீது வன்மம் கொண்டு பழிவாங்கும் உணர்ச்சியுடன் உள்ளார் என்பது தெளிவுபடுகிறது. கோட்டார் காவல்நிலைய குற்ற எண்.868/2010 கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட வை.செல்வக்குமார் என்பவரிடமிருந்து பொய் புகார் பெற்று பீட்டர் பால்துரை, காவல் ஆய்வாளர் மனுதாரர்/எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்துள்ளார். மனுதாரர்/எதிரி மேற்படி கொலை வழக்கில் சிபிசிஐடி காவல்துறை தரப்பு சாட்சி ஆவார். மனுதாரர்/எதிரி மீது சுசீந்தரம் காவல்நிலைய குற்ற எண்.827/2011 வழக்கினை பதிவு செய்த தலைமை காவலர் பெயர் மரிய ரத்தினம் ஆகும். அதன் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் கிருஷ்ணராஜ் ஆவார். புலன் விசாரணை அதிகாரி தான் எதிரியை கைது செய்வது வழக்கம். 41A Crpc படி 7 வருடங்களுக்கு உட்பட்ட குற்றங்களுக்கு கைது செய்ய வேண்டுமா என்பதை புலன் விசாரணை அதிகாரி முடிவு செய்ய வேண்டும். கைது செய்ய வேண்டியது கட்டாயமல்ல என்பது மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் உத்தரவு மற்றும் தமிழக டிஜிபியின் சுற்றறிக்கை உள்ளது. இருப்பினும் காவல் ஆய்வாளர் பீட்டர் பால்துரை தனிமனித காழ்புணர்ச்சியில் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பழிவாங்கும் விதத்தில் எதிரியை கைது செய்துள்ளார்.

**3.** கோட்டார் காவல்நிலைய குற்ற எண்.868/2010 திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்ற வழக்கு எண்.600/2017 என்ற கொலை வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவு

Cr.op (MD).8151/2010 ல் குற்றவாளியாக கூறப்பட்ட நபர் வை.செல்வக்குமார். மேற்படி வழக்கில் கொலையுண்ட நபர் மனுதாரர்/எதிரியின் கட்சிக்காரர் என்பதால் அவர் அந்த வழக்கை கையாண்டு, சிபிசிஐடி புலன் விசாரணைக்கு மாற்றினார் என்பதாலும், மனுதாரர் இந்த வழக்கின் சாட்சி என்பதாலும், காழ்புணர்ச்சி காரணமாக மேற்படி செல்வக்குமாரிடமிருந்து பொய் புகார் பெற்று பொய் வழக்கு பொய்யாக புனையப்பட்டுள்ளது. மனுதாரர்/எதிரியை கைது செய்ய வேண்டி காவல் ஆய்வாளர் பீட்டர் பால்துரையை தாக்கியதாக பொய்யாக வழக்கு பதியப்பட்டது. மேற்படி வழக்கின் புகார்தாரர் செல்வக்குமார் மீது நாகர்கோவில் நீதிமன்ற வளாகத்தில் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் முன்பு வைத்து மனுதாரர்/எதிரியை தாக்கிய வழக்கு STC No.343/2020 மாண்புமிகு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் நாகர்கோவிலில் CBCID காவல்துறையினர் குற்ற அறிக்கையின் பேரில் நடைபெற்று வருகிறது.

**4.** 06.09.2011 ம் தேதி வி.செல்வக்குமாரிடமிருந்து பொய் புகார் வாங்கி மனுதாரர்/எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில் கைது செய்ய வந்த பீட்டர் பால்துரையை தாக்கியதாக கோட்டார் காவல்நிலையத்தில் பீட்டர் பால்துரை கொடுத்த புகாரின் பேரில் மேலும் ஒரு பொய் வழக்கு குற்ற எண்.2190/2011 பதிவு செய்யப்பட்டது. ஒரு காவல்நிலைய எல்லைக்கு அப்பால் சென்று ஒருவரை கைது செய்யும் போது, சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு தகவல் தெரிவிப்பது வழக்கம். கோட்டார் காவல்நிலையம் மனுதாரர்/எதிரி அலுவலகத்தில் இருந்து 100 மீ தூரத்தில் உள்ளது. அவரது அலுவலகத்தில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக கைது செய்து விட்டு, அவர் ரோட்டில் நின்று கொண்டிருந்ததாகவும், பணம், நகை, செல்போன் என எதுவும் இல்லாமல் நின்று கொண்டிருந்ததாக கைது குறிப்பாணையில் கூறப்பட்டிருந்தது. ஆய்வாளர் பீட்டர் பால்துரையின் மனைவியின் உறவினரான மருத்துவர் குற்றாலிங்கம் என்ற மருத்துவரிடமிருந்து பொய்யான மருத்துவ சான்று பெற்று பொய் வழக்கு புனைந்துள்ளார்கள்.

**5.** சுசீந்திரம் காவல்நிலைய குற்ற எண்.827/2021 ல் நீதிமன்ற காவலுக்கு அனுப்பும் போது நாகர்கோவில் 3 வது குற்றவியல் நடுவரிடம் போலீசார் தன்னை தாக்கியதாகவும், பணம், நகை, செல்போன் பொருட்களை அபகரித்ததாகவும் புகார் வாக்குமூலம் கொடுத்து அது நடுவர் அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. சுசீந்தரம் லிங்கராஜா என்பவரிடம் இரண்டு டெம்போக்களை சட்டவிரோதமான முறையில் பழிவாங்கும் நோக்கில் பறிமுதல் செய்து அவரது மனைவி ஹேமாவை ஜாதி பெயரை சொல்லி திட்டியதாகவும், வீட்டில் இருந்த பணத்தை எடுத்து

சென்றதாகவும், ஹேமா மனு அளித்தார். அந்த புகார் ஏற்கப்படாததால் அவர் கணவர் வழக்கறிஞரை அணுகினார். அவர்களுக்கு மனுதாரர் சட்ட உதவி வழங்கினார், சுசீந்தரம் காவல்நிலையத்திற்கு பதிவு தபால் மூலம் புகார் அனுப்பிடவும், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு புகார் பிரிவு 154(3) Crpc படி மனு அனுப்பிடவும் அறிவுரை வழங்கி புகார் அனுப்பப்பட்டன. சுசீந்திரம் காவல் நிலையம் மற்றும் சிலர் மீது 24.08.2011 அன்று மேற்படி ஹேமா கன்னியாகுமரி மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் புகார் மனு தாக்கல் செய்து வழக்கு பதிவு செய்ய உத்தரவிட கேட்டு Cr. Mp. No. 1776/2011 தாக்கல் செய்தார். அவருக்கு இந்த மனுதாரர்/எதிரியே வழக்கறிஞர் ஆவார்.

6. காவல் ஆய்வாளர் பீட்டர் பால்துரை அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு சுசீந்தரம் காவல்நிலையத்தில் மனுதாரர் பெயரை ரவுடிகள் பட்டியலில் 15.09.2011 அன்று சேர்த்துள்ளார். அவருக்கு எதிராக மனுதாரர் வழக்கு தாக்கல் செய்ததால் பழிவாங்கும் நோக்கத்தில் HS No.351/2011 ஆக சேர்த்துள்ளார். 2019 ம் ஆண்டு உயர்நீதிமன்ற உத்தரவு அடிப்படையில் அது ரத்து செய்யப்பட்டது. தனக்கு எதிராக வழக்கு நடத்தும் வழக்கறிஞர் மீது பொய் வழக்கு பதிவு செய்து தானே புகார்தாரராக மாறி பொய் வழக்கு பதிவு செய்து ரவுடி பட்டியலில் சேர்த்து அதிகார துஷ்பிரயோசகம் செய்துள்ளார். 05.01.2011 முதல் 15.09.2011 வரை சுசீந்திரம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தார். மனுதாரர்/எதிரி பீட்டர் பால்துரை மீது கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யாமல் மறைக்கப்பட்டது. எனவே உயர்நீதிமன்றத்தில் Cr. OP(MD) No.3252/2012 தாக்கல் செய்தார். அந்த குற்ற பத்திரிக்கையில் கோட்டார் காவல்நிலை ஆய்வாளர் புலன் விசாரணை அதிகாரி ஆவார். எதிர் எதிர்வழக்குகள் குறித்து சொல்லவில்லை. காவல்நிலைய ஆணை 566ன் கீழ விசாரணை மேற்கொள்ளவில்லை. இந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் போது எதிர்வழக்கை பதிவு செய்யாமல் மறைத்து விட்டார். இந்த வழக்கில் குற்றசாட்டு வனைவதற்கு முன்பு இந்த மனுவில் சொல்லப்பட்ட ஆவணங்களை வரவழைத்து பரிசீலிக்க வேண்டியது நீதியின் பால் அவசியமாக உள்ளது. 06.09.2011 அன்று நடைபெற்ற குற்ற சம்பவத்தின் அடிப்படையில் கோட்டார் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட இந்த வழக்கின் எதிரி புகார்தாரராக உள்ள எதிர்வழக்கு மற்றும் அதன் நாட்குறிப்பு ஆகியவற்றை பரிசீலிக்க வேண்டியது அவசியமாய் உள்ளது. இல்லாவிட்டால் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும். ஒரே நாள் ஒரே நேரத்தில் நிகழ்ந்த குற்ற செயல் என்பதால் மேற்படி ஆவணம் வரவழைப்பது அவசியமாய் உள்ளது. ஆகவே கன்னியாகுமரி மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்தும், மாண்புமிகு திருநெல்வேலி

மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலிருந்தும், நாகர்கோவில் CBCID காவல்நிலையத்திலிருந்தும், கோட்டார் காவல்நிலையம் மற்றும் நாகர்கோவில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நீதிமன்றம் எண்.1 மற்றும் வள்ளியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஆகிய இடங்களில் இருந்து ஆவணங்களை அனுப்பி வைக்க கட்டளையிட வேண்டியது அவசியமாய் உள்ளது. எனவே இந்த மனு,

7. <u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம் -</u>

இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும். மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையல்ல. இந்த மனுதாரர்/எதிரி பொய்யான முறையில் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டார் என்பது உண்மையல்ல. பீட்டர் பால்துரை என்பவர் வழக்கு பதிவு செய்வது சம்பந்தமாக அவருக்கு எதிராக இந்த மனுதார் புகார் கொடுத்தது சம்பந்தமாக பீட்டர் பால்துரை காழ்புணர்ச்சி கொண்டார் என்று சொல்வதும், மனுவில் சொன்ன சங்கதிகளும் உண்மையல்ல. மனுவில் சொல்லியுள்ள மற்ற சங்கதிகள் உண்மையல்ல. மேலும் மனுவை தாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுவில் சொன்ன ஆவணங்களை நீதிமன்றம் வரவழைக்க கேட்பது அவசியமில்லை. சான்றிட்ட நகல் பெற்று தாக்கல் செய்ய முடியும். எனவே இந்த மனுவை அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

8. .<u>தீர்வுக்குரிய பிரச்சனை -</u>

இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா என்பதேயாகும்?

9. இருதரப்பு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

10. <u>பிரச்சனை 1 -</u>

இந்த மனுவானது பிரிவு 91 Crpc-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமர்வு வழக்கு அரசு தரப்பு வழக்கை திறவு செய்வதற்காகவும், குற்றசாட்டு வனைவதற்காகவும், நிலுவையில் உள்ளது. இந்நிலையில், புலன் விசாரணை அதிகாரிக்கும், தனக்கும் ஏற்கனவே காழ்புணர்ச்சி உள்ளதாகவும், அது சம்பந்தமாக புலன் விசாரணை அதிகாரி பீட்டர் பால்துரை என்பவர் இந்த மனுதாரர்/எதிரி மீது பொய்யான வழக்கை பதிவு செய்ததாகவும், அது குறித்த ஆவணங்களை வரவழைத்து பரிசீலனை செய்ய வேண்டும் என இம்மனுதாரர்/எதிரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

11. குற்றம் சாட்டப்பட்டவரின் பாதுகாப்புக்காகவும், தேவைக்காகவும் குற்றசாட்டை

வனையும் பொருட்டு குவிமுச பிரிவு 91ன் படி ஆவணங்களை வரவழைக்க உரிமை இல்லை என்று Justice. Sathish chandra shram, Justice. Bela Trivedi ஆகிய இருவர் அமர்வு தீர்ப்பு வழங்கியுள்ளார்கள். குற்றசாட்டு கட்டமைப்பு கட்டத்தில் ஆவணங்களை தக்கல் செய்ய முடியாது என்று மேற்படி தீர்ப்பு வழங்கியுள்ளார்கள். Crpc பிரிவு 91 படி சில சூழ்நிலைகளில் விசாரணைக்கு அவசியமாக இருக்குமேயானால் ஆவணங்களை வரவழைக்க உத்தரவிட முடியும். ஆனால் குற்றம்சாட்டப்பட்டவர் விண்ணப்பத்தின் பேரில் குற்றசாட்டு வனைவதற்காக Crpc 91 படி ஆவணங்களை வரவழைக்க முடியாது என்று மேற்படி முன்தீர்ப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கிலும் இந்த மனுதாரர்/எதிரி மீது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வழக்குகள் சம்பந்தமாகவும், எதிரிடை வழக்குகள் உள்ளதாகவும், அதனை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் வரவழைக்க கேட்டுக்கொண்டார். மேற்படி மனுவில் சொன்ன ஆவணங்களை வரவழைத்து பரிசீலிப்பதால் எதிரி, தான் குற்ற செயலை செய்யவில்லை என்பதை தீர்மானிக்க முடியாது. ஆகவே எதிரி மீது குற்றசாட்டு வனைவதற்கு முன்னதாக ஆவணங்களை வரவழைக்க கேட்க உரிமையில்லை என்று தீர்மானித்து உச்சநீதிமன்ற உத்தரவு படி இந்த மனுவை அனுமதிக்க முகாந்திரம் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12. முடிவில், **மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 07-ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

/Sd./A.Barsad Begam.

**உதவி அமர்வு நீதிபதி,**

**வள்ளியூர்.**

**<u>சாட்சி விபரங்கள் :-</u>**

| | |
|---|---|
| **மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**: | - இல்லை |
| **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**: | - இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்**: | - இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - இல்லை |

/Sd./A.Barsad Begam.

**உதவி அமர்வு நீதிபதி,**

**வள்ளியூர்.**

Assistant Session Court, Valliyoor

Crmp 661/2022 in SC 203/2022

Draft/Fair Order

D.D - 07-03-2024